


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ், விபத்தில் மரணமடைந்த இரண்டு மீனவர்களின் குடும்பத்தினருக்கு காப்புறுதி நிவாரணத் தொகையாக தலா ரூ. 2 இலட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் நடைபெற்ற மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று (21.10.2016) வழங்கினார். துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லாமக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 744/2016 நாள்: 21.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**இன்று (21.10.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (21.10.2016) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மீனவ மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டத்தில் கடந்த மாதத்தில் மீனவ மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து துறைவாரியான பதில்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. இதில் பிற துறையை சார்ந்த 26 மனுக்களும், மீன்வளத்துறையை சார்ந்த 11 மனுக்களும், தனிநபர் மனுக்கள் 73 என மொத்தம் 110 மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

கடலில் காணாமல் போகும் மீனவர்களை இறந்தவர்களாக அறிவிப்பது 7 ஆண்டுகளாக இருப்பதை ஓராண்டாக குறைத்து அரசிடமிருந்து ஆணை பெறுவது தொடர்பான கருத்துருக்கள் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரமும், 2015-16-ம் ஆண்டு மீனவர்களுக்கான மீன்பிடி குறைந்த கால நிவாரண திட்டத்தின் புதிய பயனாளிகளுக்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் நிவாரணத்தொகை வழங்கப்படும் என்ற விபரமும், கொல்லங்கோடு பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் தனி நபர் கழிவறை இல்லாத வீடுகளின் விபரம் கணக்கெடுக்கப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது எனவும், கீழ்மிடாலம் கிராமத்தில் கடலரிப்பு தடுப்புச்சுவர் 785 மீட்டர் நீளத்திற்கு ரூ.235.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கான கருத்துரு அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், மணக்குடி ஊராட்சியில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, செயற்பொறியாளர் கடலரிப்பு தடுப்புக்கோட்டம் நாகர்கோவில் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசு நிதி கிடைக்கப்பெற்றால் கடலரிப்பு கோட்ட பிரிவு மூலம் பணி மேற்கொள்ளப்படும் எனவும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பைங்குளம் ஊராட்சி முள்ளூர்துறை சுனாமி குடியிருப்பு ரோட்டரி நகர பகுதியிலுள்ள குப்பைகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரமும், இரவிபுத்தன்துறை என்ற இடத்தை சார்ந்த இருதயதாசி என்பவருக்கு முதியோர் உதவி தொகை பெற தகுதியுடையவர். ஆதலால் அவருக்கு உதவித்தொகை வழங்கப்படும் எனவும், தூத்துரை சார்ந்த மேரி என்பவருக்கு முதியோர் உதவி தொகை வழங்கப்படும் எனவும், பூத்துறையை சார்ந்த லில்லிமேரி என்பவருக்கு முதியோர் உதவி தொகை வழங்கப்படும் எனவும், இணையம் என்ற இடத்தை சார்ந்த செல்வி, சிலுவை அம்மாள்

ஆகியோர்களுக்கு முதியோர் உதவி தொகை வழங்கப்படும் எனவும், வள்ளிவிளை சார்ந்த ஜெனஸ்டஸ் என்பவருக்கு புற்றுநோய் பரிசோதனை செய்து கண்டறியும் வசதியுடைய எந்த அரசு மருத்துவமனை வாயிலாகவும் விண்ணப்பிக்கப்பட்டு, அரசு மருத்துவமனை மூலம் பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு புற்றுநோய் உதவித்தொகை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மீனவர் மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கூட்டத்தில் துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லாமக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.